செ.வெ.எண்: 7 நாள்: 04.01.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில் 4,64,142 குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழக அரசின் சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் ரூ.116.04 கோடி ரொக்கம் வழங்கப்படுகிறது.**

**விராலிமலை நியாயவிலைக் கடையில் சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (4.1.2021) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை கூட்டுறவு அங்காடியில் பொங்கல் பண்டிகையையொட்டி குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழக அரசின் சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் தலா ரூ.2,500 வீதம் ரொக்கத்தினை வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள பொதுமக்கள் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடும் வகையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் ரூ.2,500 ரொக்கத்தினை வழங்க உத்தரவிட்டு, இத்திட்டத்தினை துவக்கி வைத்துள்ளார்கள்.

இதன்படி தமிழக அரசின் சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பில் ஒவ்வொரு குடும்பமும் பயன்பெறும் வகையில் தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு, 20 கிராம் உலர் திராட்சை, 20 கிராம் முந்திரி, 5 கிராம் ஏலக்காய் உள்ளிட்ட பொருட்களுடன் ஒரு நல்ல துணிப்பை வழங்கப்படுவதுடன், ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் தலா ரூ.2,500 ரொக்கமும் வழங்கப்படுகிறது. இதன்மூலம் பொதுமக்கள் பொங்கல் பண்டிகையை மிகச் சிறப்பாக கொண்டாட முடியும்.

அதனடிப்படையில் இன்றையதினம் விராலிமலை கூட்டுறவு அங்காடியில் 1,134 குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழக அரசின் சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் தலா ரூ.2,500 வீதம் மொத்தம் ரூ.28.35 லட்சம் ரொக்கம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இலுப்பூர் கூட்டுறவு அங்காடியில் 803 குடும்ப அட்டைதாரர்களுக்கும், அன்னவாசல் கூட்டுறவு அங்காடியில் 886 குடும்ப அட்டைதாரர்களுக்கும், புதுக்கோட்டை டிவிஎஸ் கார்னர் அர்பன் கூட்டுறவு அங்காடியில் 1,192 குடும்ப அட்டைதாரர்களுக்கும், திருமயம் கூட்டுறவு அங்காடியில் 1,431 குடும்ப அட்டைதாரர்களுக்கும், மழையூர் கூட்டுறவு அங்காடியில் 1,301 குடும்ப அட்டைதாரர்களுக்கும் தமிழக அரசின் சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் தலா ரூ.2,500 ரொக்கமும் வழங்கப்படவுள்ளது.

இதேபோன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் 1,024 நியாயவிலைக் கடைகளில் உள்ள 4,64,142 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பண்டிகையையொட்டி தமிழக அரசின் சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் தலா ரூ.2,500 வீதம் மொத்தம் ரூ.116,03,55,000 மதிப்பில் ரொக்கமும் வழங்கப்படுகிறது.

மேலும் கூட்டுறவுத்துறையின் சார்பில் பொதுமக்கள் தங்களது இருப்பிடங்களிலேயே பொருட்களை பெறும் வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 100 எண்ணிக்கையில் நடமாடும் நியாயவிலைக்கடைகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று இப்பகுதி பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகள் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே தமிழக அரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பொதுமக்கள் உரிய முறையில் பெற்று பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் பா.ஆறுமுகம், மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் உமாமகேஸ்வரி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கித்தலைவர் இரா.சின்னத்தம்பி, மாவட்ட பால்வளத்தலைவர் எஸ்.பழனியாண்டி, ஒன்றியக்குழுத்தலைவர் வி.ராமசாமி, பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**